# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.58/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணிய ராஜு | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பராஜு | ஜாதி | : -- |
| வயது | : 73 | கிராமம் | : பீரக்குப்பம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**13.12.2024**

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

7. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் நான்தான் ஸ்ரீராமபஜன கோயிலின் அரங்காவலர் என்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில் இந்த வழக்கு தொடர எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நானும் ஒரு உறுப்பினர்தான். மொத்தம் 10பேர் உறுப்பினர்கள் உள்ளார்கள். வழக்கு சொத்தில் நூலகம், தண்ணீர் தொட்டி கட்டி எத்தனை வருடம் ஆனது என்றால் 15 வருடம் ஆகிறது. அவ்வாறு நூலகம், தண்ணீர் தொட்டி கட்ட எங்களிடம் அனுமதி எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உரிமையாளரிடம் கேட்டுதான் கட்டியுள்ளார்கள் என்றாலும் வழக்கு சொத்து கோவில் நிலம் இல்லை என்றாலும் எனக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

8. வழக்கு சொத்து சம்பந்தமாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் UDR க்கு பின்னிட்டவை என்பதால் அவை செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கோவிலுக்கு வழக்கு சொத்து உட்பட சொத்துக்களை இனாமாக எழுதி கொடுத்ததற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிகள் அனைவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதிகள் என் உறவினர்கள் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக என் உறவினர்களை வைத்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9. முறையாக உரிமையாளரிடம் இருந்து பிரதிவாதி கிரையம் பெற்று தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. எனது வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)